திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த முந்திரியிலிருந்து பளாஸ்டிக் உற்பத்தி செய்வதாகச் சொன்னார்களே, அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாரேனும் அப்படிப்பட்ட திட்டத்தை ஏற்று நடத்த முன்வந்தால் அரசாங்கம் அதை நிறைவேற்றும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டை நம்முடைய நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது இப்போது குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முந்திரி ஏற்றுமதியைப் பற்றிய விவரங்கள் இல்லை.

வாடகைக்குத் தொளையிடும் இயந்திரங்கள்

* 474 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினைகளுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாய இலாகாவில் போரிங் மிஷின் வாடகைக்கு விடும் திட்டத்தின் மூலம் கடந்த 1965, 1966 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தனித்தனியே வசூலிக்கப்பட்ட வாடகை எவ்வளவு?

(இ) இந்த வருடங்களில் வாடகை பாக்கி ஏதேனும் உண்டா?

(உ) ஆம் எனில், யார் யாரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 1965-ல் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ. 8,266.15, 1966-ல் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ. 12,782.99.

(இ) இல்லை.

(உ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

Oil Tanker Berth in Madras Harbour

* 475 *Q.*—THIRU U. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an Oil Tanker Berth in Madras Harbour in Madras City ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சபைமுன் அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதைப் பார்க்குமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

@ 216—218-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 டிசம்பர் 16]

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact that the oil bunker berth and the connecting pipe to Manali is causing considerable inconvenience to the fishermen in the locality?

THE HON. Si. Pa. ADITANAR : I have no such information.

நவீன அரிசி ஆலைகள்

* 476 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971–72-ம் ஆண்டில், தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் நவீன அரிசி ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : கூட்டுறவுத் துறையில் இயக்கப்படுகின்ற நவீன அரிசி ஆலைகள் நஷ்டத்தில் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. அவை லாபத்தில் இயங்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழு இருக்கிறது.

நிலக்கோட்டை கூட்டுறவு விற்பனைச்சங்கம்

* 477 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தாலுகா விநியோக விற்பனைச் சங்கம் எப்பொழுது கலைக்கப்பட்டது ?

(இ) அதன் தலைவர், இயக்குநர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) மதுரை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்டில் குற்றவாளிகளின்பேரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 1.43 லட்சம் ரூபாயைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பனை நுங்கு ஏற்றுமதி

* 478 வினா—திரு. பா. பா. சாரதி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனை நுங்கு (Panai Nungu) ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.